2. தகவல் கோரல்.

அ) பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பது குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மனிதாபிமான பிரச்சினை ஒன்று. கண் பார்வையற்றோர் கோட்டை நோக்கி ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது குறை, அவர்கள் பயிற்சி பெற்றாலும் வேலை வாய்ப்பு பெறமுடியவில்லை என்பதாகும். மத்திய அரசாங்கத்தின் கொள்கை கண்பார்வை இழந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது; ஊமையர்களாக உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்பது. அதற்காக இவர்களுக்கு, ஒரு, ஒரு சதம் ஒதுக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நமது அரசாங்கத்திற்கு இது ஏற்கெனவே தெரியும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது. சொல்ல வேண்டியதைச் சொல்லி, ரெக்கார்டில் ஏற்றி விட்டீர்கள். மற்றதை எழுதிக் கொடுத்து விடுங்கள்.

ஆ) தொகுதிகளில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள அந்தந்த தொகுதி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிப்பது.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது, அவையிலே பணியாற்றுகின்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கின்ற வகையிலே இருக்கிற பிரச்சினை ஆகும். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தொகுதிகளிலே நடக்கின்ற அரசு விழாக்களிலே அமைச்சர்கள் பங்கேற்கின்ற பொழுது, அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டுமென்று இங்கே வற்புறுத்திக் கேட்டு, நம்முடைய அவை முன்னவராலே அப்படி செய்யப்படும் என்கின்ற வாக்குறுதி கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் கடந்த காலத்தில் என்னுடைய சைதாப்பேட்டை தொகுதியில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் பால்வள அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். * * அவர்கள் கூட கலந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்று தமிழ்நாட்டிலும் இல்லை, உலகத்திலும் இல்லை. அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தர விடுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : இன்றைய தினம் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் மற்றும் மூன்று மந்திரிகளும் என்னுடைய தொகுதியில் ஒரு விழாவிலே கலந்து கொள்ள இருக்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

றார்கள். தொகுதி உறுப்பினராகிய நான் கலந்து கொள்ள வாய்ப்பு தரப்படவில்லை. (குறுக்கீடு) இது உரிமைப் பிரச்னையே ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உரிமைப் பிரச்னை என்றால் எழுதிக் கொடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது உரிமைப் பிரச்னை ஆகாது. பொதுவாக அரசு நடத்துகின்ற விழாக்களிலே, அரசு விழாக்கள், எந்த எந்தத் தொகுதியிலே நடைபெற்றாலும் அந்தந்தத் தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை அந்தந்த நிகழ்ச்சி நிரலிலே சேர்க்க வேண்டுமென்று நானே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆனால் அப்படிப் போட்டுங்கூட பல நிகழ்ச்சிகளிலே அவர்கள் வருவதில்லை, சில நிகழ்ச்சிகளுக்கு வருகிறார்கள். ஆனால், இது உரிமைப் பிரச்னை ஆகாது. இப்பொழுதும் சொல்கிறேன், என்னைப் பொறுத்தவரையிலும், அவர்கள் வந்தாலும் வரா விட்டாலும் கூட, போகிற பல்வேறு அரசு நிகழ்ச்சிகளிலே அவர்களுடைய பெயர்களைப் போட்டுவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதையே அத்தனை அமைச்சர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் போட்டாலும் வருவதில்லை. வராததற்கு ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆனால், அதற்காக அரசு அதைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்லவில்லை. அரசு விழாக்களைப் பொறுத்த வரையில், அந்தந்தத் தொகுதியிலே இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர்கள் போடப்பட வேண்டுமென்று தான் பெரும்பாலான விழாக்களில் சொல்லப்படுகிறது. மாண்புமிகு புருஷோத்தமன் சொல்வது தனியாக ஆராயப்பட வேண்டிய ஒன்று.

திரு. து. புருஷோத்தமன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர், (கூச்சல், குழப்பம்).

டாக்டர் கே. சமரசம் : துணைத்தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தார் அரசு விழாக்களிலும், அமைச்சர் கலந்துகொள்கிற கூட்டங்களிலும் கலந்துகொள்வதில்லை என்ற தீர்மானத்தைப் போட்டு கலந்து கொள்ளாமல் பல நேரங்களில் இருந்திருக்கிறார்கள். அந்த நிலையிலிருந்து கொண்டு அந்தப் பிரச்சினையைப் பற்றி பேட்பது:............
(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. (குறுக்கீடு)

திரு. து. புருஷோத்தமன் : நான் சொல்லியது.........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகளை நான் எடுத்துச் சொல்லி விட்டேன். ஆகவே இதை மேலும் விவாத மாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இ) நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டம்,

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களை வழங்கக் கூடிய நுகர் பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இன்றைய தினம் உண்ணாவிரதப் போராட்டத்தை..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அது பற்றி முறையாக எழுதிக் கொடுத்து விடுங்கள். (கூச்சல், குழப்பம்)

திரு. சோ. அழகர்சாமி : இன்றைக்குப் பிறகு சட்டமன்றம் ஏப்ரல் 9 ஆம் தேதி தான் கூடுகிறது. திரு. கருப்பையா அவர்கள் ஒரு முக்கியமான பிரச்னையை எழுப்பியிருக்கிறார். ஆகவே, அதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்ப இயலாது. இவர் எழுப்பினாலும் அரசிடம் அதற்கு பதில் இருக்காது. முறையாக எழுதிக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்).

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கல்லூரி ஆசிரியர், ஆசிரியர் அல்லாதவர் பல்கலைக் கழகத் தேர்வுப் பணியை புறக்கணிக்க இருப்பது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், எஸ். ரெத்தினராஜ், கு. பா. பழனியப்பன், த. ஆறுமுகம், ரா. கிருஷ்ணன், டி. மணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். பழனிவேல், ஜே. ஹேமச்சந்திரன், என். வரதராஜன், ரா. உமாநாத், மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்பன், என். எஸ். வி. சித்தன், இல. பலராமன், உ. சுப்பிரமணியன், எல். இளையபெருமாள் ஆகியோர், ''தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாதார் வருகிற ஏப்ரல்—மே மாதங்களில் நடைபெற இருக்கும் பல்கலைக் கழகத் தேர்வுப் பணிகளை புறக்கணிக்க இருப்பதை யொட்டி கல்லூரி மாணவர்கள் மத்தியிலும், அவர்தம் பெற்றோர் மத்தியிலும்